
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ARAN International e-Journal of Tamil Research

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:2 Issue : 7 July 2020*

கோட்டை :2 வாயில்:7 ஜூலை 2020

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ISSN: 2582-399X

Aran
International e Journal of Tamil Research
ISSN: 2582-399X


# ஆசிரியர் குழு

முனைவர் வாணிஅறிவாளன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் V.வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் P.பாண்டிக்குமார்

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்
+917299587879
www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# நன்றி

அனைவருக்கும் வணக்கம்

*COVID-19* காரணமாக நமது ஏப்ரல் இதழும் ஜூலை இதழும் வெளிவருவதில் தாமதம் ஏற்பட்டு விட்டது. கட்டுரையாளர்களின் ஒத்துழைப்புக்கும், பேராசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்களுக்கும் நமது ஆய்விதழை வாசிக்கும் உலகம்முழுதும் உள்ள தமிழ் நெஞ்சங்களுக்கும் எங்களது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*Hi everyone*

*COVID-19 has delayed the release of our April and July issues. We would like to express our humble respect and gratitude to the authors for their cooperation, to the professors and research students and to the Tamil hearts around the world who read our Research paper.*

அன்புடன்
முனைவர். பிரியாகிருஷ்ணன்
நிறுவனர்/பதிப்பாசிரியர்/நிர்வாகஆசிரியர்,
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
*www.aranejournal.com*
*aranjournal@gmail.com*
*PH: +917299587879*

# அகத்தினுள்


எச்சமரபுகளும் பொதுமரபுகளும்
முனைவர். பெ. விஜயலட்சுமி

தொல்காப்பியம் சுட்டும் இலக்கிய வகைகளும் அதன் வளர்ச்சி நிலையும்
அ. வேளாங்கன்னி அமிர்தா

இலக்கணத்தில் இலக்கியத்தரவுகள்: நன்னூல், அகப்பொருள் விளக்கம் மற்றும் மயிலைநாதர் உரை ஆகிய நூற்களை முன்வைத்து
முனைவர். தி. இராஜரெத்தினம்

புறநானூறும்புறங்காடும்
திருமதி. மு. அழகுராணி

சங்கஇலக்கியங்கள் கூறும் போர்க்கள ஆடல் வகைகளும் அவற்றின் தன்மைகளும்
கலாநிதி திருமதி. தாக்ஷாயினி பிரமதேவ்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒலிக்குறிப்புச் சொற்கள்
மா. ஆதிமூலம்

தமிழர் பண்பாட்டில் தாய்த் தெய்வ வழிபாடு
முனைவர். ப. விமலா அண்ணாதுரை

ச. முருகபூபதியின்பூழிப்பாவைநாடகம் :புழுதியாகிப்போனநிலத்தின்குரல்
முனைவர். ம. கருணாநிதி,

ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யர்களின் வரலாறு
முனைவர்வ. கோபாலகிருஷ்ணன்



முகப்பு
புகைப்படம் இணையம்
நன்றி

# அகத்தினுள்

**இலக்கியங்களில் மடலேறுதல்**
ஓர்ஆய்வு - பொ. பிரபு

**Was Madras Benighted?: The British Beauracratic Control Over The Swadeshi Press And Political Literaturemadras Presidency, 1908-1912**
**Dr.V.Venkatraman, Ph.D., D.Litt.,**

*Kurinji Life style focused on malasar and kaadar of Anaimalai hills -*
**Dr. G. Vennila**

*Sri KirupaSamuthra Perumal Temple at Nannilam taluk - A Study*
**Mrs. R. Brindakumari**

**வட இலங்கையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட அரியவகை ஈமச்சின்னஙங்கள்**
திருமதி. சிவரூபிசயிதரன்

**7ஆம் நூற்றாண்டில் தமிழர்கள் பாசிமணிகள் உற்பத்தி செய்த மலேசியாவின் குவாலா செலின்சிங் வரலாற்றுத்தளம்**
ம. லிங்கேஸ்வரன்

**Just Another Film Industry: Tamil Cinema in Global India**
**Miss. AmruthaKanapulli**

முகப்பு
புகைப்படம் இணையம்
நன்றி

தமிழ்

# ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களின் வரலாறு

**முனைவர் வ.கோபாலகிருஷ்ணன்,**
**உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை,**
**சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**
**சேலம் - 636 005.**

**கட்டுரை ஆசிரியரின் குறிப்பு:**

நாமக்கல் மாவட்டம் இராசிபுரத்தில் பிறந்த இவர் பெரியார் பல்கலைக்கழகத்தில் முதுகலை தமிழிலக்கியத்தில் தங்கப் பதக்கம் பெற்றவர். அதே பல்கலையில் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளார். பெரியார் பல்கலையின் கீழ் இயங்கும் ஓசூர் எம்.ஜி.ஆர் கல்லூரியில் வைணவ உரைகளும் உரையாக்க மரபுகளும் எனும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். இதே கல்வி நிறுவத்தில் 8 ஆண்டுகளாகப் பணிபுரிந்தவர். தற்போது சேலம் சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணிபுரிந்து வருகிறார். இவருடைய வழிகாட்டலின் கீழ் 15-க்கும் மேற்பட்ட ஆய்வியல் நிறைஞர் மாணவர்கள் உருவாகியுள்ளனர். 5-க்கும் மேலான பயிற்சி பட்டறைகளில் பங்கேற்றும், 20-க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

**ஆய்வுச் சுருக்கம்:**

பக்தியிலக்கிய வரலாற்றில் சைவத்திற்கு உரை எழுதா மரபு கடைப்பிடிக்கப்பட்டு வந்ததை அனைவரும் அறிவர். இதற்கு மாறாக வைணவத்திற்கு உரை இயற்றிய நிலையை வரலாறு ஒருபோதும் மறைத்ததில்லை. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தைத் தொகுத்த நாதமுனிகள் வரலாற்றையும் இராமானுஜர் பற்றிய வரலாற்றையும் நம் வைணவ உலகம் தெளிவாக அறிந்து அவ்வப்போது மக்களுக்குச் சொற்பொழிவாகவும் நூல்களின் மூலமாகவும் எடுத்துரைக்கின்றது. அப்படியிருக்க வைணவ இலக்கியங்களுக்கு உரை எழுதியவர்களின் வரலாறு நம்மில் பலரும் அறியாதவர்களாக உள்ளோம். இவ்வுரையாசிரியர்களின் மரபானது திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்பவரிடம் தொடங்கி மணவாளமாமுனிகள் வரை நீள்கிறது. இவ்வரலாற்றினைக் குறித்து சுருக்கமாக தொகுத்து எடுத்துரைப்பதே இக்கட்டுரையாகும்.

**திறவுச்சொற்கள்:**

வைணவ ஆசார்யர்களின் வரிசை - ஸ்ரீநாதமுனிகள் வரலாறு - அருளிச் செயல்களைக் கண்டெடுத்தல் - ஸ்ரீஆளவந்தார் வரலாறு - ஸ்ரீஇராமானுஜர் வரலாறு - எம்பார் - பராசரபட்டர் – நஞ்சீயர் – நம்பிள்ளை - வடக்குத் திருவீதிப்பிள்ளை - பெரியவாச்சான் பிள்ளை - பிள்ளைலோகாசாரியர் – மணவாளமாமுனிகள்.

வைணவ இலக்கியத்தை வளர்த்தெடுத்த பெருமை ஆசார்யர்களையே சாரும். காரணம் ஆழ்வார்களால் அருளிச் செய்யப்பட்ட நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முழுவதும், ஆழ்வார்கள் வாழ்ந்து மறைந்த கால கட்டத்திற்குப் பின்னர், காலப்போக்கில் முழுதும் அழிந்துபோயின. ஆனால், ஆசார்யர்களின் முயற்சி இல்லாவிடின் அதனையும் கைவிட்டிருப்போம். அதிலும்,

நாதமுனிகளின் பங்கு போற்றத்தக்கதாகும். இத்தகைய ஆசார்யர்களின் பெருமையைப் பற்றி, “ஆழ்வார்களால் அருளிச் செய்யப்பட்ட நாலாயிர திவ்யப் பிரபந்தம் முழுவதும், ஆழ்வார்கள் வாழ்ந்து மறைந்த காலகட்டத்திற்குப் பின்னர், கால வெள்ளத்தால் முழுதும் அழிந்துவிட்டன. வைணவ ஆசார்யர்களின் முயற்சி இல்லாவிடின், அதிலும் குறிப்பாக, நாதமுனிகளின் முயற்சி இல்லாமல் போயிருந்தால், நிச்சயமாய் நாம் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் அனைத்தையும் இழந்திருக்கக்கூடும். மேலும், ஆழ்வார்களின் பாசுரங்களில் காணக்கிடைக்கும் தத்துவார்த்த விளக்கங்களையும், உள்ளது உள்ளபடியே அறிய வாய்ப்பில்லாமலே போயிருக்கும்.”[1] என்கிறார் தேவராஜன். இத்தகைய ஆசார்யர்களை ‘குரு’ என்று வைணவ உலகம் போற்றுகின்றது. பிள்ளைலோகாச்சார்யர் ஒரு மேன்மையான கருத்தை குறிப்பிடுவார். அதாவது,

“நேரே ஆசாரியன் என்பது சம்சார நிவர்த்தகமான
பெரிய திருமந்திரம் உபதேசித்தவனை”[2]

என்ற அடிகளின் வாயிலாக விளக்கம் தருகின்றார். அதாவது, ‘நிவர்த்தகமான’ என்பதற்கு ‘விடுவிப்பதான’ என்பது பொருளாகும். ‘திருமந்திரம்’ என்பது ‘ஓம் நமோ நாராயணயா’ என்ற திருவெட்டெழுத்தினைக் குறிப்பதாகும். இவர்கள் வெறும் தோற்றத்தில் மட்டுமன்றி, ஜீவாத்மாவைக் கொண்டு சேர்ப்பிக்கும் வல்லமையைக் குறைவின்றிப் பெற்றிருப்பவனே ‘ஆசார்யன்’ எனப்படுவான் என்றும் குருவாகத் திகழ்ந்து சீடர்களாக இணைகின்றவர்களை மனத்தூய்மைக்கு ஆளாக்கி இறைவனோடு சேர்வதற்கான பாதையைக் காட்டுபவர்கள் என்றும் சுட்டுகிறார். இத்தகு ஆச்சார்யர்களின் வாயிலாகவே நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு உரைகள் தோன்றின என்றால் எவராலும் எண்ணிப்பார்க்க முடியாத ஒன்றாகும். இப்பெருமை கொண்ட ஆசார்யர்களை அறிந்துகொள்ள வாய்ப்பில்லாத சூழ்நிலையை இக்கட்டுரை மேலும் அறிந்துகொள்ள ஒரு தொடக்கமாக அமையும் எனலாம்.

**வைணவ ஆசார்யர்களின் வரிசை**

ஸ்ரீவைஷ்ணவ ஆசார்ய பரம்பரையானது எம்பெருமான் (பெரிய பெருமாள்) முதல் கொண்டு பெரிய பிராட்டியார், சேனை முதலியார் (விஷ்வக்ஷேணர்), நம்மாழ்வார், நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார் (யமுனைத் துறைவர்), பெரிய நம்பி, எம்பெருமானார் (ஸ்ரீஉடையவர், இராமானுஜர்), எம்பார், பட்டர் (பாரசரபட்டர்), நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாச்சார்யர், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாள மாமுனிகள், நம்பெருமாள் வரை அமைகின்றனர். இவ்வரிசையில் முதல் மூவர் பரமபதத்தில் இருப்பவர்களாவர். அதாவது, இறைவனாகக் காட்சியளிப்பவர்கள். இதில் நம்மாழ்வாரைத் தொடக்கமாகக் கொண்டு ஆச்சார்ய பரம்பரை தொடங்குகிறது. நம்மாழ்வாருக்கு அடுத்த நிலையில் நாதமுனிகள் என்பாரை வைணவப் பெரியோர்கள் போற்றிப் பாடுவர்.

**ஸ்ரீநாதமுனிகள் வரலாறு**

வைணவ இலக்கியத்திற்கு அளப்பறிய தொண்டு செய்தவரும் திவ்யப் பிரபந்தத்தைத் தொகுத்தவரும் நாதமுனிகள் ஆவார். குருபரம்பரைக் கதையின்படி ஸ்ரீநாதமுனிகள் தற்போது காட்டுமன்னார்குடி என்றழைக்கப்படும் வீரநாராயணபுரத்தில் ஈஸ்வரபட்டாழ்வர் என்ற வைணவ

அடியார்க்கு மகனாகப் பிறந்தார். அவ்வூரில் உள்ள வீரநாராயணப் பெருமாள் கோயிலில் வைணவ தொண்டு செய்துவந்தார். இப்படிப்பட்ட நாதமுனிகளுக்கு ஈஸ்வர முனிகள் எனும் மகன் ஒருவன் இருந்தான் என்பது அவரது வரலாற்றின் மூலமாக அறிகிறோம்.

ஈஸ்வரபட்டர், நாதமுனிகள், ஈஸ்வர முனிகள் ஆகியோர் வீரநாராயணப் பெருமாளின் கட்டளைப்படி வடநாட்டில் உள்ள திவ்ய தேசங்களுக்குக் குடும்பத்துடன் சென்றனர். அதன்படி ஸ்ரீகிருஷ்ணர் அவதாரத் தலங்களான மதுரை, திருவாய்ப்பாடி, பிருந்தாவனம், கோவர்த்தனகிரி, திருத்துவாரகை தலங்களையும், ஸ்ரீஇராமர் அவதார தலங்களான அயோத்தி, சாளக்கிராமம். புதரிகாஸ்ரமம், நைமிசாரண்யம், ஸ்ரீஅஹோபிலம் ஆகிய தலங்களையும் தரிசித்தனர். இவ்வாறாக திருத்தலங்களாகச் சென்று வழிபாடு செய்யும் சமயத்தில் ஒரு நாள் திருமால் நாதமுனிகளின் கனவிலே தோன்றி 'அனைவரும் வீரநாராயணபுரம் திரும்புக' எனக் கட்டளையிடுகிறார். அதனையேற்று அனைவரும் தங்கள் ஊருக்கே திரும்பினர். பிறகு வீரநாராயணப் பெருமாளை வணங்குவதற்காக நாதமுனிகள் திருக்கோவிலுக்குச் செல்கிறார். அப்போது வைணவ அடியார் ஒருவர் நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் வருகின்ற,

"………குருகூர்ச் சடகோபன்
குழலில் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்
மழலை தீரவல்லார் காமர் மானேய் நோக்கியர்க்கே"[3]

என்ற பாசுரத்தைப் பாடி நிறைவு செய்கிறார். இப்பாசுரங்களைக் கண்ணீரோடு கேட்டுக்கொண்டிருந்த நாதமுனிகள். தாங்கள் பாடிய கடைசி பாசுரத்தில் 'ஓராயிரத்துள் இப்பத்தும்' என்று வருகிறதே! அதனால், இதனை அருளிச் செய்த குருகூர்ச் சடகோபன் ஆயிரம் பாசுரங்களுக்கு மேல் பாடியிருப்பதாகத் தெரிகின்றதே! என அடியவரை கேட்கிறார். அதற்கு அவ்வடியவர் 'தெரியாது' என்கிறார். அச்சமயத்தில்தான் நம்மாழ்வாரின் பாசுரங்கள் அனைத்தையும் கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகிறது.

**அருளிச் செயல்களைக் கண்டெடுத்தல்**

'ஆரா அமுதே' எனத் தொடங்கும் நம்மாழ்வாரின் பாசுரம் திருக்குடந்தை ஆராவமுதப் பெருமாளின் மீது பாடப்பட்டதாகும். இதை உணர்ந்த நாதமுனிகள் கும்பகோணம் எனும் திருக்குடந்தை திருத்தலத்திற்குச் செல்கிறார். அங்குள்ள வைணவ அடியார்களிடம் நம்மாழ்வாரின் பாசுரங்களைப் பற்றி வினவுகிறார். அதற்கு வைணவர்கள் திருவரங்கம் சென்றால் இதைப் பற்றி அறியலாம் என்கின்றனர். அதன்படி நாதமுனிகள் திருவரங்கம் செல்கிறார். அங்குள்ள வைணவ அடியார்கள் ஆழ்வார் திருநகரிக்குச் செல்க எனக் கூறுகின்றனர். தனது முயற்சியைக் கைவிடாத நாதமுனிகள் அங்கு செல்கிறார். அங்குள்ள வைணவர்கள் அருகிலுள்ள திருக்கோளூரில் நம்மாழ்வாரின் சீடரான மதுரகவியாழ்வாருக்குச் சீடராகத் திகழும் ஸ்ரீபராங்குசதாசர் வசித்து வருவதாகவும் அவரிடம் சென்றால் நம்மாழ்வார் மற்றும் மதுரகவியாழ்வாரைப் பற்றிய விவரங்கள் கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்தார். அதன்படி அங்கு சென்று பராங்குசதாசரை சந்தித்து தான் வந்த எண்ணத்தைப் பற்றி எடுத்துக்கூறினார். அதற்கு பராங்குசதாசர் தன் குருவினுடைய 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' பிரபந்தம் மட்டுமே உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், மதுரகவியாழ்வார் தன்னிடம் ஒருமுறை 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் பிரபந்தத்தினை

நம்மாழ்வாரின் உருவச்சிலையின் முன்பு பன்னீராயிரம் முறை ஓதினால் ஆழ்வாரே நேரில் தோன்றி, மறைந்துபோன பிரபந்தங்கள் அனைத்தையும் மீண்டும் அருளிச் செய்வார் என்று கூறியதாகக் குருபரம்பரை கதை எடுத்துரைப்பதையும் அறிகிறோம்.

பராங்குசதாசரின் அறிவுரைகளை சிரமேற் கொண்டு நாதமுனிகள் நம்மாழ்வார் உருவச்சிலை முன் அமர்ந்து கண்ணிநுண் சிறுத்தாம்பு பாசுரங்களைப் பன்னீராயிரம் முறை உச்சரிக்கிறார். அடுத்தகணமே நம்மாழ்வார் நாதமுனிகளிடம் தோன்றி அருளிச்செயல்களைத் தருகிறார். இவ்வாறு மறைந்துபோன நாலாயிர திவ்யப் பிரபந்தம் அனைத்தும், நாதமுனிகள் மேற்கொண்ட பெருமுயற்சியின் மூலம் மீண்டும் வெளிக்கொணரப்பட்டன. ஸ்ரீநாதமுனிகள் ஆழ்வார்களுடைய பாசுரங்களோடு வீரநாராயணபுரம் திரும்புகிறார். வீரநாரயணப் பெருமாளின் ஆணைப்படி பாசுரங்களுக்கு இசையமைக்க முற்படுகிறார். இதற்கு நாதமுனிகளின் மருமக்கள் மேலையகத்தாழ்வாரும், கீழையகத்தாழ்வாரும் உதவிசெய்கின்றனர். நாலாயிர திவ்யப் பிரபந்தத் தொகுப்பில் இசைப்பாத் தொகுதிகளுக்கு மட்டும் 29 வகையான பண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிற்காலத்தில் 18 புதிய பண்களும், 11 தாளங்களும் பயன்படுத்தப்படுகிறது என்று இசை வல்லுநர்கள் சுட்டுகின்றனர். மேலும் திருமாலை வழிபடவும், திருவாய்மொழி முதலான திவ்யப் பிரபந்தத்தின் உள்ளுறைப் பொருள், வேத சாஸ்திரங்கள், யோக சாஸ்திரங்கள் ஆகியவற்றை உணர்ந்துகொள்ளும் நோக்கத்தில் ஸ்ரீநாதமுனிகளிடம் 1.உய்யக்கொண்டார், 2.குருகைக்காவலப்பன், 3.நம்பி கருணாகரதாசர், 4.ஏறுதிருவுடையார், 5.திருக்கண்ணமங்கையாண்டான், 6.வானமாமலை தேவியாண்டான், 7.உருப்பட்டூர் ஆச்சான் பிள்ளை, 8.சோகத்தூராழ்வான் எனும் எட்டு சீடர்கள் சேர்ந்ததாகவும் கூறுகின்றனர். ஒரு சமயம் யோக நிலையில் இருந்த நாதமுனிகள் அருளிச் செயல்கள் நம் காலத்திற்குப் பிறகும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்றெண்ணி தன் சீடர்களுக்கு உபதேசம் செய்கின்றார். இதில் மிக நெருங்கிய சீடரான உய்யக்கொண்டார் என்பாரிடம் நாதமுனிகள் உபதேசம் செய்ய முற்படுகிறார். உய்யக்கொண்டாருக்கு உபதேசம் செய்து நாதமுனிகளின் (ஈஸ்வரமுனிகள்) பிறக்கப்போகின்ற ஆளவந்தாருக்கும் (யமுனைத்துறைவர்) உபதேசம் செய்ய வேண்டும் என்று கட்டளையிடுகிறார். இந்த ஆளவந்தார் ஸ்ரீஇராமானுஜருக்கும் வைணவ சித்தாந்தங்களையும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களும் பொதுமக்களிடையே தழைப்பதற்கு பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக நாதமுனிகள் தன் கடமைகளை முடித்துக்கொண்டு ஆழ்ந்த யோகத்தில் செல்கிறார். நெடுநாளுக்குப் பிறகு ஒரு பெண் யோகத்தில் இருக்கும் நாதமுனிகளை எழுப்பி, 'தங்களைக் காண நம் அகத்திலே ஒரு குரங்கும், இரண்டும் வில்லிகளும், ஒரு பெண் பிள்ளையுமாக வந்து போனார்கள்' என்று கூறுகிறாள். இதைக் கேட்ட நாதமுனிகள் இராமன், லட்சுமணன், சீதா, ஆஞ்சநேயர் ஆகிய நால்வர்களே வந்தார்கள் என அறிந்துகொண்டு இவர்களைத் தேடிக்கொண்டே கங்கை கொண்ட சோழபுரம் வரை சென்றதாகவும், அவ்வாறு நெடுநாள் அலைந்து இராமபிரானைக் காண முடியாமல் வழியிலே உயிர்நீத்தார் என்றும் வைணவப் பெரியோர்கள் எடுத்துக்கூறுகின்றனர். இந்நிலையினைக் குறித்து, "நம்மாழ்வார் என்ற முகில், நாதமுனிகள் என்ற மலைமுகட்டில் மழை பொழிந்தது. அந்த ஞான வெள்ளம் உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி என்ற அருவிகளாக இறங்கி, ஆளவந்தார் என்னும் பெரிய ஆற்றில் கலந்தது. இந்தப் பேராறு கலந்த

கடல் போன்ற தடாகம்தான் இராமானுஜர் மற்றும் ஏனைய ஆசார்யர்கள் என்னும் மதகுகளின் வழியாகப் பாய்ந்து, உலகு வளம் கொழிக்கவும், செழிக்கவும் உதவின."[4] என்ற கருத்தை வைணவமும் ஆழ்வார்களும் எனும் நூலில் தேவராஜன் குறிப்பிடுவதன் மூலம் ஆசார்யர்களின் வரலாற்றுக்கு ஒரு சங்கிலி தொடர் போன்ற வரலாறு இருப்பதை அறிந்துகொள்ளலாம்.

**ஸ்ரீஆளவந்தார் வரலாறு**

நாதமுனிகளின் மகன் ஈஸ்வரமுனிகள். இவருடைய மகனே ஸ்ரீஆளவந்தார். இவருக்கு யமுனைத் துறைவர் என்ற பெயரும் உண்டு. பிறந்தது முதலாக அபூர்வ ஞாபக சக்தி உடையவராக விளங்கினார். வடமொழி தமிழ் ஆகிய இரண்டிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். சிறு வயது முதற்கொண்டே ஒருமுறை கேட்ட உடனேயே வேதங்கள் மற்றும் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் ஆகிய அனைத்தும் அவருக்கு மனப்பாடம் ஆகியது. இவர் இளம் வயதிலேயே அனைத்து நூல்களையும் மாபாடிய பட்டர் என்ற ஆசிரியரிடம் கற்றுத் தெரிந்துகொண்டதாகவும் கூறுவர்.

ஒரு சமயம் சோழனுடைய அரச சபையில் ஆக்கியாழ்வான் என்ற வடமொழிப்புலவன் செல்வாக்கு செலுத்தி வந்தான். தனது அறிவையும், திறமையும் கொண்டு தென்பகுதியில் வாழ்ந்த புலவர்களைத் தன்னுடன் போட்டிக்கு அழைத்து தோல்வியடையச் செய்தான். தோல்வியடைந்த புலவர்கள் ஆக்கியாழ்வானுக்குக் கப்பம் செலுத்தவேண்டும். அதன்படி தோற்ற புலவர்களிடமிருந்து, அரசனின் உத்தரவுப்படி ஆண்டுதோறும் கப்பத்தொகையையும் வசூலித்து வந்தான். யமுனைத்துறைவரின் குருவான மாபாடியபட்டர் கப்பம் செலுத்திவந்தார். ஒரு சமயம் வறுமைக் காரணமாக மாபாடியபட்டர் கப்பத் தொகையைச் செலுத்தவில்லை. அதனால் ஆக்கியாழ்வான், தனது சீடனை மாபாடியபட்டரிடம் அனுப்பி கப்பத் தொகையை வசூலித்து வருமாறு அனுப்பினான்.

ஆக்கியாழ்வானால் அனுப்பப்பட்ட தூதன் வந்தபோது மாபாடிய பட்டர் வெளியே சென்றிருந்தார். அப்பொழுது அங்கிருந்த யமுனைத்துறைவர், அத்தூதரிடம் வந்த காரணத்தை வினாவினார். அதற்கு தூதன், மாபாடிய பட்டர் கப்பத் தொகையைச் செலுத்தாமல் இருப்பது பற்றி தெரிவித்து, உடனே செலுத்தாவிட்டால் மீண்டும் ஆக்கியாழ்வானிடம் தர்க்க வாதம் புரிவதற்குத் தயாராக இருக்க வேண்டுமெனத் தெரிவித்தான். என் குருவிற்குப் பதிலாக தான் வாதம் செய்ய தயராக உள்ளேன் என்று யமுனைத்துறைவர் அத்தூதரிடம் தெரிவித்தார். அதன்படி அத்தூதனும் ஆக்கியாழ்வானிடம் கூறி அரசனுடைய அனுமதியைப் பெற்றும் யமுனைத்துறைவரை அரசவைக்கு வர அழைப்பு விடுத்தனர்.

யமுனைத்துறைவர் அரசவைக்கு வந்தார். வாதம் செய்து வெற்றி பெறுபவருக்கு அரசின் பாதி பங்கு வழங்குவதாகவும் அரசன் அறிவித்தான். ஆக்கியாழ்வான் யமுனைத்துறைவரிடம் இலக்கணம், அமரகோசம் போன்ற பல்வேறு நூல்களிலிருந்து வினாக்கள் கேட்க தக்க பதில்களை யமுனைத்துறைவர் கூறினார். அடுத்ததாக யமுனைத்துறைவர் ஆக்கியாழ்வானிடம் வாதம் செய்ய தயாரானார். யமுனைத்துறைவர் 1.உம்மைப் பெற்ற தாய் மலடி அல்ல. 2.சோழ அரசன் மிகவும் நீதிமான். 3.அரசியார் சாவித்திரியைப் போன்ற பதிவிரதை எனும் மூன்று வாக்கியங்களை மறுத்துப் பேசுமாறு ஆக்கியாழ்வானிடம் கூறுகிறார். இவ்வாக்கியங்களை மறுத்துப் பேசமுடியாமல் ஆக்கியாழ்வார் திணறினார். இதனால் தோற்றுப்போகும் நிலை உண்டானது. இம்மூன்று

வாக்கியங்களையும் மறுத்தும், விரித்துரைத்தும் யமுனைத்துறைவர் வெற்றி கண்டார். இதைக் கண்ட சபையோர்கள் அனைவரும் 'நாவலோ நாவல்! நாவலோ நாவல்!' என்று ஆரவாரம் செய்தனர். அரசியார், யமுனைத் துறைவரை அளவந்தாரே! எங்களை ஆளவந்தீரோ! என்று வாழ்த்திக் கூவினார். அரசனும் தான் வாக்களித்தபடி தன் அரசில் பாதியை ஆளவந்தார் எனும் யமுனைத்துறைவருக்கே வழங்கினார்.

ஏராளமான செல்வங்களும் நிலங்களும் சேர்ந்ததனால் தன் மதிகெட்டு உலக இன்பமே நிலை என்று கிடந்தார். பாட்டனரான ஸ்ரீநாதமுனிகள் ஆளவந்தாரின் நிலை கண்டு மிகவும் வருந்தினார். தன் பெயரனை நல்வழிபடுத்த வேண்டும் என்ற நோக்கில் தன் சீடன் மணக்கால் நம்பியை தூதாக அனுப்புகிறார். தூதாக வந்த மணக்கால் நம்பி பரதேசி கோலத்தில் இருந்ததால் ஆளவந்தார் அரண்மனைக்குள் செல்லமுடியவில்லை. சத்துவ குணத்தைக் கொண்டது தூதுவளை கீரை என்று கூறி அரண்மனையில் உள்ள மடைப்பள்ளி சமையல்காரனிடம் நண்பராகினார் மணக்கால் நம்பி. இதனைக் காரணமாகக் கொண்டு தினந்தோறும் தூதுவளையை ஆளவந்தார் உணவில் சேர்த்தார். இதனால் தூதுவளையைத் தரக்கூடிய பணியாளராக நம்பி முன்னேறினார். இதேபோன்று ஆறு மாதங்கள் கடந்தன. ஒரு நாள் கீரை தருவதை மணக்கால் நம்பி நிறுத்திவிட்டார். சமையலிலும் கீரை இல்லாமல் இருந்தது. ஆளவந்தாருக்கு உணவு பரிமாறும்போது தூதுவளை கீரை இல்லை என்பதை அறிந்து ஏன் இல்லை? என வினவுகிறார். அப்போது, சமையல்காரன் ஆறுமாதமாக கீரை தந்த பெரியவர் தற்போது அரண்மனைக்கு வரவில்லை என்று கூறுகிறான். அத்தகு பெரியவரை நேரில் காணவேண்டும் என்று ஆளவந்தார் தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறார்.

மணக்கால் நம்பி வழக்கம்போல் தூதுவளையைக் கொண்டு வந்து அடுத்தநாளே கொடுத்தார். உடனே சமையல்காரரும் நம்பியிடம் முன்தினம் நடந்ததைச் சொல்லி ஆளவந்தாரிடம் கொண்டு வந்து நிறுத்தினார். அப்பொழுது பெரியவர் ஆளவந்தாரைப் பார்த்து, 'ஐயா! நான் தங்கள் பாட்டனாரான ஸ்ரீநாதமுனிகளின் சீடன். அவர் தன்னுடைய உயிர் பிரியும் சமயத்தில், தங்களிடம் சரியான தருணத்தில் ஒப்படைக்கும் படி ஒரு பெரிய நிதியை என்னிடம் கொடுத்திருக்கிறார். தாங்கள் அந்நிதியைப் பெற்றுக்கொண்டு என்னைப் பொறுப்பிலிருந்து விடுவிக்க வேண்டும்.' எனக் கூறினார். உடனே ஆளவந்தாரும் அதற்குச் சம்மதித்தார்.

அச்செல்வத்தைக் குறித்து நம்பியிடம் மேலும் விசாரித்தார். அதற்கு நம்பியவர்கள், நீங்கள் என்னுடன் வந்தால் நிதி உள்ள இடத்திற்கு அழைத்துச் செல்வேன். இரண்டு ஆறுகளுக்கு இடையில், ஏழு மதில் சுவர்களுக்கு நடுவில் ஒரு பெரிய நாகத்தால் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது. ஓர் இலையை இட்டு, அந்த மந்திரத்தை ஓதினால் அந்த நிதி தங்களுடைய கண்ணுக்குத் தெரியும். அதைப் பெறுவதற்குத் தாங்களே என்னுடன் தனியாக நேரில் வரவேண்டும் என்று பதிலளித்தார். திருவரங்கப் பெருமானைக் குறித்து மணக்கால் நம்பி ஆளவந்தாரிடம் கூறியவுடன் உடனே அரங்கனைக் காண பித்துப்பிடித்தவர்போல் அளைந்தார். மாயையில் இருந்து விலகினார். வைணவக் கடவுள் மீதும் வைணவ சமயத்தின் மீதும் பற்றுக்கொண்டவராகத் திகழ்ந்தார். வைணவ உலகிற்கு இராமானுஜரை அடையாளம் காட்டியவரும் இவரே ஆவார்.

ஆளவந்தாருக்கு இருபது சீடர்கள் இருந்ததாக குரு பரம்பரை நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. 1. பெரிய நம்பி 2. திருக்கோஷ்டியூர் நம்பி 3. பெரிய திருமலை நம்பி 4.

மாறனேறி நம்பி 5. திருக்கச்சி நம்பி 6. ஆளவந்தாராழ்வான் 7. திருமாலையாண்டான் 8. வானமாமலையாண்டான் 9. தெய்வவாரியாண்டான் 10. ஈசனாண்டான் 11. சீயராண்டான் 12.திருக்குருகூரப்பன் 13. திருமோகூரப்பன் 14. திருமோகூர்நின்றான் 15. தெய்வப் பெருமாள் 16. வகுளாபரணஸோமயாஜியார் 17. திருக்குருகூர்தாஸர் 18. திருமாலிருஞ்சோலை தாஸர் 19. வடமதுரைப் பிறந்தான் 20. ஆட்கொண்டியம்மங்கி ஆகியோராவர். இதில் பெரிய நம்பி, திருக்கோஷ்டியூர் நம்பி, பெரிய திருமலை நம்பி, திருக்கச்சி நம்பி ஆகியோர் இராமானுஜருக்கு ஆச்சார்யராகவும் விசிஷ்டாத்வைதம் தொடர்பான சந்தேகங்கள் பலவற்றை நீக்கி வைணவ உலகத்திற்குப் பெருந்தொண்டு ஆற்றியவர்களாவர். ஆழ்வார் பாசுரங்களில் இராமானுஜருக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் இவர்களைக் கொண்டே விளக்கம் பெற்றதாகவும் சொல்லப்படுகிறது. இதிலிருந்தே இப்பெரியோர்களின் மேன்மை விளங்கும்.

ஆளவந்தாரின் உடல் நலிந்த சமயத்தில் காஞ்சிபுரத்தில் உள்ள இராமானுஜரின் மீது பற்று ஏற்பட்டது. நம்முடைய சீடர்களுக்கு அடுத்து வைணவத்தை இவ்வுலகத்தில் நிலையாக இருக்கச் செய்ய இராமானுஜரால் மட்டுமே முடியும் என்பதை உணர்கிறார். அதனால் தன் சீடன் பெரிய நம்பி மூலம் இராமானுஜரை திருவரங்கம் வரவழைக்க ஏற்பாடு செய்தார். இராமானுஜர் திருவரங்கம் வருவதற்கு நான்கு நாட்கள் ஆனது. அதற்குள் ஸ்ரீஆளவந்தார் இயற்கை எய்தினார். திருவரங்கம் காவிரி கரைக்கு வந்த இராமானுஜர் ஆளவந்தாரின் பூதவுடலைக் கண்டு மிக அழுது வருந்தினார். ஆளவந்தாரின் வலது கையில் மூன்று விரல்கள் மடங்கியே இருப்பதைக் கண்டு ஏன்? எனச் சீடர்களிடம் வினவினார். அதற்கு சீடர்கள் குருவின் நிறைவேறா ஆசைகளாக இருக்கலாம் என ஊகித்துக் கூறினர். அச்சமயத்தில் ஸ்ரீஇராமானுஜர் ஆளவந்தாரின் உள்ளத்தில் இருப்பதை உள்ளவாறே சீடர்களிடம் உரைக்கின்றார். ஸ்ரீஆளவந்தாருக்கு அடுத்தபடியாக வைணவத்தில் தலைசிறந்தவராக விளங்குபவர் ஸ்ரீஇராமானுஜர் ஆவார். இவருக்கு இளையாழ்வார் என்ற பெயரும் உண்டு. ஸ்ரீஇராமானுஜர் பிறப்பானது ஸ்ரீஆளவந்தாரை அடியொற்றியதாகும்.

**ஸ்ரீஇராமானுஜர் வரலாறு**

ஸ்ரீஆளவந்தாருக்கு அடுத்தபடியாக வைணவத்தில் தலைசிறந்தவராக விளங்குபவர் ஸ்ரீஇராமானுஜர் ஆவார். இவருக்கு இளையாழ்வார் என்ற பெயரும் உண்டு. ஸ்ரீஇராமானுஜர் பிறப்பானது ஸ்ரீஆளவந்தாரின் ஆசார்யர்களை அடியொற்றியதாகும். அதாவது, ஸ்ரீஆளவந்தாரின் ஆசாரியர் பெரிய திருமலை நம்பிகள். இவருக்கு இரண்டு சகோதிரிகள். காந்திமதியார், தாதமதி இவர்களில் கேசவசோமயாஜிக்கு காந்திமதியாரையும், கமலநாயன பட்டருக்கு தாதமதியையும் திருமணம் செய்து கொடுத்தார். இவர்களுள் கேசவசோமயாஜிக்கு பல ஆண்டுகளாக குழந்தைப்பேறு இல்லை. திருக்கச்சி நம்பி திருமாலை வணங்குவதற்காக தினந்தோறும் கேசவசோமயாஜி இல்லத்தில் தங்கியிருந்து செல்வார். அப்போது கேசவசோமயாஜியும் காந்திமதியாரும் திருமாலிடம் எங்களுக்கு குழந்தைப்பேறு உண்டாக வேண்டும் என்று வேண்டிக்கொள்ள திருக்கச்சி நம்பியிடம் பணிந்தார்கள். திருமாலை நினைத்து யாகமும் பூசையும் செய்தார்கள். அதன் பயனாக ஸ்ரீபெரும்புதூரில் இராமானுஜர் எனும் இளையாழ்வார் அவதரித்தார். இவரை இலக்குமணன் எடுத்த அவதராரம் என்று வைணப் பெரியோர்கள் அழைப்பர். சிறுவயதிலே ஞானமும், ஆன்ம சிந்தனையும் உடையவராகத் திகழ்ந்தார்.

இத்தகு பெருமையுடைய இராமானுஜரை ஒரு குருவிடம் பெற்றோர்கள் சேர்க்க முற்பட்டனர். அவ்வாறு யாதவப்பிரகாசரின் சீடராக பெற்றோர்கள் சேர்த்துவிட்டனர். குரு ஞானஅறிவு அற்றவர் என்பதை இராமானுஜர் அறிந்திருந்தார். இருப்பினும் பெற்றோரின் விருப்பப்படி நடந்துகொண்டார். ஆனால் யாதவப்பிரகாசர் செய்யும் உபதேசங்களில் தவறு இருப்பதை அவ்வப்போது சுட்டிக்காட்டுவார். அதனால் இராமானுஜர் மீது குருவுக்கு கோபம் ஏற்படும். இதனை இராமானுஜரின் சிற்றன்னை மகன், அதாவது, தம்பி கோவிந்தபட்டர் கவனித்து வந்தார். குரு தண்டிக்கும்போதெல்லாம் தம்பி துணை செய்வார். ஒரு சமயம் கச்சிநகரை ஆண்ட பல்லவ அரசனது மகளை பிரம்மராஜசன் பிடித்துக்கொண்டு படாதபாடுபடுத்தினான். இத்தகைய இராட்சசனை இராமானுஜர்தான் விரட்டினார். இச்செய்தியை அறிந்த ஆளவந்தாரும் அவரின் சீடர்களும் இராமானுஜரை தம்பக்கம் ஈர்க்கலாயினர்.

இராமானுஜர் மனைவி தஞ்சமாம்பாள் ஆவார். இவர் சரிவர வைணவர்களுக்குப் பணிவிடை செய்யாததால் துறவு மேற்கொண்டார். அதனாலே இவரை இராமானுஜ முனி, யதிராஜர் என்றும் அழைப்பர். இவருடைய அருமை பெருமைகளை அறிந்து குருவாக இருந்த யாதவப்பிரகாசர் சீடராக மாறிக்கொண்டார். இவ்வாறு தன் குருவையே சீடனாக மாற்றிய சிறப்பு ஸ்ரீஇராமானுஜருக்கு உண்டு எனலாம். ஸ்ரீகோவிந்தஜீயர் என்ற பெயருடன் திவ்யப் பிரபந்தங்களைக் கொண்டு வாய்மொழியாகவே வியாக்கியானங்கள் செய்துவரலானார். இவ்வாறெல்லாம் இராமானுஜரைப் பற்றி அறிந்த ஆளவந்தார் தன் இறப்புக்குப் பிறகு வைண சாம்ராஜியத்தின் அடுத்த தலைவர் இவரே என்றும், திருவரங்கத்திற்கு வரவழைக்க ஏற்பாடு செய்யுமாறு தன் சீடன் பெரிய நம்பியிடம் கட்டளையிட்டார். இதை சிரமேற்கொண்டு கச்சிக்கு வரும் போதுதான் ஆளவந்தார் உயிர் பிரிவதும், இராமானுஜர் ஆளவந்தாரின் விருப்பங்கள் மூன்றினைக் கூறுவதும் போன்ற சம்பவங்கள் நிகழ்கின்றன. இதற்கு பிறகு ஆளவந்தாரின் சீடர் பெரிய பெருமாள் உள்ளிட்டோர் எல்லாம் ஒன்றுகூடி முடிவுசெய்து இராமானுஜரை தங்கள் குருவாக நியமனம் செய்ய முடிவு செய்தனர். நாம் வைத்திருக்கும் அனைத்து சொத்துக்களுக்கும் உரியவர் இராமானுஜரே என அறிவித்தார். அன்று முதல் உடையவர் என அழைக்கப்பட்டார்.

இராமானுஜரின் தம்பியாகிய கோவிந்தபட்டர் காளஹஸ்தியில் உள்ளங்கை கொணர்ந்த நாயனார் என்ற பெயரில் சிவபெருமானை வணங்கிவந்தார். அதேவேளையில் இவரை வைணவத்திற்கு வரவழைக்கும் நோக்கில் திருமலை நம்பிகள் அவரிடத்திற்கு வந்து திருவாய்மொழி வியாக்கியானம் செய்தார். அதைக் கேட்டு வைணவத்திற்கு மாறினார். தன் தம்பி இராமானுஜர் வந்ததையறிந்து அவரை எம்பார் என அழைத்து தன் சீடராக மாற்றிக்கொண்டார்.

திருவரங்கத்திலுள்ள அனைத்து பொறுப்புகளையும் திருவரங்கத்தமுதனார் கவனித்து வந்தார். திருவரங்க திறவுகோலை இராமானுஜர் கையில் கொடுத்து அவருடன் சேர்ந்து வியாக்கியானப் பணியைச் செய்துவந்தார். திருப்பாவைக்கு சீரிய முறையில் இராமானுஜர் வாய்மொழி வியாக்கியானம் செய்ததால் இவரை திருப்பாவை ஜீயர் என்றும் அழைப்பர். திருக்கோஷ்டியூர் நம்பிகள் இராமானுஜருக்கு திருமந்திரத்தைக் கற்பித்தார். இம்மந்திரத்தை யாரிடமும் கூறக்கூடாது என்றும் கட்டளையிட்டார். இம்மந்திரத்தை நீர் மட்டும் உச்சரித்தால் சொர்க்கம் கிட்டும் என்றருளினார். இதைக்கேட்ட இராமானுஜர் அடுத்தகணமே எல்லா

சீடர்களுக்கும் உபவாசம் செய்தருளினார். இதையறிந்த திருக்கோஷ்டியூர் நம்பிகள் இராமானுஜரிடம் கேட்க, எல்லாருக்கும் சொர்க்கம் கிடைக்கட்டும் என்றார். அதுமுதல் இராமானுஜரை எம்பெருமானார் என அழைக்க முற்பட்டனர்.

திருமாலையாண்டானிடம் திருவாய்மொழி வியாக்கியானம் கேட்டருள வேண்டும் என எண்ணி திருக்கோஷ்டியூர் நம்பி இராமானுஜரை திருமாலையாண்டானிடம் அழைத்துச் சென்றார். அவர் தவறாக வியாக்கியானம் செய்வதை அவ்வப்போது சுட்டிக்காட்டினார். அதற்கு திருமாலையாண்டான் தனக்கு ஆளவந்தார் சொல்லித்தந்ததையே தங்களுக்கும் சொல்கிறேன் என்றார். அதற்கு இராமானுஜர் தான் விளக்கம் சொல்கிறேன் என்று கூறி ஆளவந்தார் கூறுவதுபோல வியாக்கியானம் செய்தார். அதைக்கேட்ட திருமாலையாண்டானும், திருக்கோஷ்டியூர் நம்பியும் அதிசயத்தில் திகைத்து நின்றனர். இவ்வாறாக வைணவ உலகத்திற்கு தான் ஒரு பெரிய இரும்பு மனிதராக உள்ளதை நிரூபித்துக்காட்டினார்.

இத்தகு இராமானுஜர் தான், “ஸ்ரீஆளவந்தார் தம்முடைய சிஷ்யர்களிலே சிறந்தவர் பெரிய நம்பிகள், திருக்கோட்டியூர் நம்பிகள், திருமாமலையாண்டான், பெரிய திருமலை நம்பிகள், ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் ஐவருக்கு ஐந்து விசேஷ கருத்துகளைத் தனித்தனியாக உபதேசித்தருளினார். அந்த ஐவரையும் அடிபணிந்து அவர்களை ஆசார்யர்களாகக் கொண்டு அவரவர்களிடம் உள்ள அர்த்த விசேஷங்களைக் கேட்டுத் தாம் ஒருவரே அவை அனைத்தையும் உலகுக்குப் பரப்பலானார்.”[5] எனும் செய்தியும், இவர் காலத்தில், “ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த சாரம், வேதாந்த சங்கரகம், கீதா பாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்யம்”[6] போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார். இத்தகைய இராமானுஜர் காலத்தை வைணவர்கள் கி.பி.1017-1137 வரை கணக்கிடுகின்றனர். அதாவது 120 ஆண்டுகள் வாழ்ந்து முடிந்து பெருமாளிடம் சேர விருப்பம் கொண்டார். அதன்பின்னர் ஸ்ரீஇராமானுஜர் 74 ஸ்ரீவைஷ்ணவ சீடர்களுக்குத் தனித்தனி பீடம் அமைத்து அவர்களைச் சிம்மாசனாதிபதிகளாக்கினார். தொடர்ந்து எம்பார் முன்னிலையில் அடுத்த ஆசாரிய பீடத்தை பட்டர் நடந்துவார் எனக்கூறி ஸ்ரீவைகுண்ட பதவியடைந்தார். மேலும், “திருவரங்கத்தில் ஆசார்யராகப் பொறுப்பேற்ற இராமானுஜருக்கு, நாளுக்கு நாள் மென்மேலும் அடியார்கள் குழாம் கூடத்தொடங்கியது. இராமானுஜருக்கு நூறு வயது இருந்த சமயத்தில் அவருக்குச் சுமார் பதினோராயிரம் பூனூல் அணிந்த சீடர்களும், பன்னீராயிரம் பூனூல் அணியாத சீடர்களும், எழுநூறு வைணவத் துறவிகளும், பல்லாயிரக்கணக்கான பெண் வைஷ்ணவிகளும், இலட்சக்கணக்கான திருமால் அடியார்களும் தொண்டர்களாய் இருந்ததாகவும் 72 உபதேசங்களையும் உபதேசித்ததாகவும் சொல்லப்படுகிறது.”[7] என்று இராமானுஜரைப் பற்றி குறிப்பிடுகின்ற விட்டல்தாஸ் என்பவரின் கருத்தையும் அறிந்துகொள்ள வேண்டும். இராமானுஜர் ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தார் என்றாலும், திருவரங்கத்திலே சதாபிஷேகம் என்று சொல்லப்படுகின்ற நூறு வயது வைபவங்கள் நடைபெறுகின்றன. தானே சொல்லி வடிவமைக்கப்பட்ட இராமானுஜரின் சிலை ஸ்ரீபெரும்புதூரில் நிறுவப்பட்டது என்று வைணவச் சான்றோர்கள் கூறுகின்றனர்.

**எம்பார் வரலாறு**

இராமானுஜருக்குப் பின் திருவரங்கத்தில் எம்பார் ஆசார்யபீடத்தில் அமர்ந்தவராவார். எம்பார் (கோவிந்தப்பட்டர்) என்பர் இராமானுஜரின் சிற்றனையின் மகனாவார். இவரும்

இராமானுஜரும் யாதவப்பிரகாசரிடம் சீடர்களாக இருந்தனர். காளஹஸ்தி சிவதலத்தில் சிவத்தொண்டு செய்து வந்தார். இராமானுஜருக்கு 'எம்பெருமானார்' என்ற பெயரும் உண்டு. இப்பெயரின் சுருக்கமே எம்பார் எனப்படுகிறது. இராமானுஜரின் இறப்புக்குப் பிறகு ஆசார்ய பதவி ஏற்ற எம்பார் அவருடைய விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களையும் ஆழ்வார் பாசுரங்களின் வியாக்கியானங்களையும் பட்டர் முதலான சீடர்களுக்கு எடுத்துரைக்கின்றார். அதன் பிறகு எம்பார் வைகுண்ட பதவி அடைகிறார்.

**பராசரபட்டர் வரலாறு**

இராமானுஜரின் நெருங்கிய சீடர் கூரத்தாழ்வான் ஆவார். இவருடைய மனைவி ஆண்டாளுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. இதையறிந்த இராமானுஜர் தன் சீடன் எம்பாரை அனுப்பி குழந்தைகளுக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து முடிக்கச் சொன்னார். சடங்குகளைச் செய்து முடித்து இராமானுஜரிடம் குழந்தையைக்காட்ட எடுத்து வந்தார். அப்போது தீய சக்திகள் அண்டாதிருக்க குழந்தைகளின் காதில் மந்திரத்தை ஓதிக்கொண்டே வந்தார். அன்று முதல் அவ்விரு குழந்தைகளுக்கும் ஆசார்யராக இருக்கும்படி இராமானுஜர் ஆணையிட்டார். அக்குழந்தைகளில் மூத்த குழந்தைக்கு பராசரபட்டர் என்றும், இளைய குழந்தைக்கு வியாச பட்டர் என்றும் இராமானுஜர் பெயர் சூட்டினார்.

கூரத்தாழ்வாரிடமும், எம்பாரிடமும் பராசரபட்டர் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள நுண்கருத்துக்களைத் தெளிவாகக் கற்றுக்கொண்டார். மேலும், பராசரபட்டருக்கு இராமானுஜர் மறையும் முன்பு இரண்டு பணிகளைக் கூறிச்சென்றார். முதலாவது, தமது சீடரான திருக்குருகைப்பிரான் பிள்ளானைக் கொண்டு திருவாய்மொழிக்கு விளக்கம் எழுதச் செய்தமை, இரண்டாவது, மேல் நாட்டில் வேதாந்தி எனும் பெயர் கொண்ட அறிஞர் ஒருவரை திருத்திப் பணி கொள்ளுமாறு பட்டரைப் பணித்தார். இத்தகைய வேதாந்தியே பின்னாளில் நஞ்சீயர் என்றழைக்கப்பட்டார். இதன் வாயிலாக இராமானுஜரின் தெய்வ ஆற்றலைக் காணமுடிகிறது. அதாவது, நஞ்சீயர் பற்றிய விவரங்களை எல்லாம் ஸ்ரீஇராமானுஜர் முன்கூட்டியே அறிந்திருக்கிறார் என்பது உண்மையாகிறது. இதனை, "பட்டர் இவ்வுலகில், வெறும் இருபத்தி எட்டு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. இதை முன்கூட்டியே இராமானுஜர் அறிந்த காரணத்தினாலும், பட்டருக்குப்பின் ஆசார்ய ஸ்தானத்தை வகிக்க மிகவும் பொருத்தமானவராக, வேதாந்தியான நஞ்சீயர் இருக்கக்கூடும் என்று இராமானுஜர் தமது ஞானத்தினால் அறிந்திருந்ததாலும், பட்டரை, மேல் நாட்டில் வாழும் வேதாந்தியைத் திருத்திப்பணி கொள்ளுமாறு செய்தார் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது."[8] என்கிறார் வேணுசீனிவாசன். இக்கருத்திற்கு வலுசேர்க்கும் விதமாக சில சான்றுகளையும் எடுத்துக்காட்டுகிறார். இதை, "இராமானுஜர், சக ஆண்டு 1059 (கி.பி.1137) பரமபதம் பட்டர், வேதாந்தியைத் திருத்திப் பணி கொண்டதாகத் தெரிகிறது. ஸ்ரீ.எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள், ஸ்ரீஇராமானுஜர் பரமபதித்த பிறகு மூன்று வருடங்களுக்குள் அதாவது, கி.பி.1140-க்குள் அவருக்குப் பிறகு ஆசார்ய பதவியை வகித்த எம்பார் பரமபதித்ததாகக் கூறுகிறார். இது சரியாக இருக்கும் பட்சத்தில், பட்டர் நஞ்சீயரை கி.பி.1137-38 வாக்கில் திருத்தப் பணி கொண்டிருக்க வேண்டும் என்று அறிஞர்களால் நம்பப்படுகிறது."[9] எனும் சான்றினையும் இணைத்து நோக்குவதன் மூலம் அறியலாம். இக்கருத்து எத்தகையதாக இருப்பினும்

நஞ்சீயர் பற்றிய விவரங்களை எல்லாம் ஸ்ரீஇராமானுஜர் முன்கூட்டியே அறிந்திருக்கிறார் என்பது உண்மையாகிறது.

வேதாந்தியைச் (நஞ்சீயர்) சந்திப்பதற்காகத் தனது சீடர்களை அழைத்துக்கொண்டு திருநாராயணபுரம் செல்கிறார். அவ்வூரில் உள்ளவர்கள் பட்டரிடம் பிட்சை கேட்கும் அந்தணரைப்போல் சென்றால் நிச்சயம் வேதாந்தி தங்களை அவர் இல்லத்திற்கு அழைப்பார் என்று கூறினார்கள். அதன்படியே பராசரபட்டரும் செல்கிறார். பிட்சைக்கு வந்த பட்டர் உணவு பரிமாறும் இடத்திற்குச் செல்லாமல் தனியே தயங்கி நிற்பதைக் கண்ட வேதாந்தி உணவு பெற்றுக்கொள்ளுமாறு அழைக்கிறார். அதற்கு தர்க்க பிட்சை செய்ய வந்திருக்கிறேன் என்கிறார். அதனால் பட்டரும் வேதாந்தியும் வாதம் செய்கின்றனர். இதில் வேதாந்தி தோல்வி அடைகிறார். பிறகு இராமானுஜரின் சித்தாந்தத்திற்கும் பட்டருக்கும் அடிமையாகிறார். பட்டர் வேதாந்தியை அழைத்துக்கொண்டு திருவரங்கம் திரும்புகிறார்.

அவ்வாறு, திருவரங்கம் செல்கையில் வேதாந்தி தன் இருமனைவிகளுக்கும் தன் சொத்தை மூன்றாகப் பிரித்து ஆளுக்கு ஒரு பாகமாக இருமனைவிகளுக்கும் கொடுத்துவிடுகிறார். மீதமுள்ள ஒரு பாகத்தை பட்டருக்கு சமர்ப்பிக்கிறார். இந்நிலையோடு திருவரங்கம் செல்கிறார். அவ்வாறு சென்றவுடன் தன் சீடர்களின் முன்பு 'நம் சீயர் வந்தார்' என்று கூறி வேதாந்தி எனும் நஞ்சீயரை அணைத்துக் கொண்டார் பின் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள், இராமானுஜரின் விசிஷ்டாத்வைதம், அவருடைய விருப்பங்களையெல்லாம் கூறி வழிநடத்துகிறார். பின் பட்டருக்கு இருபத்தி எட்டு வயதிருக்கும் நிலையில் வைகுண்ட பதவி அடைகிறார். தனது ஆசார்யனின் மறைவை எண்ணி மிகவும் வருந்தினார் நஞ்சீயர். பட்டரின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு நஞ்சீயர் தன்னை தயார்படுத்திக்கொண்டார் என்பதை இவருடைய வரலாறு வாயிலாக அறியலாம்.

**நஞ்சீயர் வரலாறு**

நஞ்சீயரின் இயற்பெயர் மாதவாசாரியர். காங்கோரை எனும் இடத்தில் திருநாராயணபுரத்தில் பிறந்தார். பராசரபட்டருடைய விருப்பத்திற்குரிய ஆசார்யர் ஆவார். பட்டரின் பல்லக்கை சுமந்தவர். இதேபோல், ஒரு நாள் பட்டர் வெளியூர் சென்று வந்திருந்த அசதியில் உறக்கம் கொள்ள எண்ணினார். அப்போது நஞ்சீயர் இரவு முழுவதும் தன்மடியில் உறங்க வைத்துக்கொண்டார். அவருக்கு ஒருபோதும் உறக்கம் கலையாதிருக்க தன் தொடை மாற்றாமலும் அசைக்காமலும் நிலையாக இருந்தார். இந்தளவிற்கு தன் குருவின் மீது பற்று உடையவராகத் திகழ்ந்தார்.

தான் வியாக்கியானம் செய்யும்போதெல்லாம் அடிக்கடி 'பட்டர் கூறியது போல' எனப் பலமுறை கூறுவார். இத்தகையவரின் அன்புக்குரியவராக நம்பிள்ளை விளங்கினார். இவர்களிடத்திலிருந்துதான் ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கு விளக்கவுரை தோன்ற ஆரம்பித்தது. இதனை, 'ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு, நாதமுனிகள் காலம் தொடங்கி இராமானுஜர் காலம் வரையில், விளக்கங்கள் வாய்மொழியாகவே சொல்லப்பட்டு வந்தன. முதன் முதலில் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களுக்கு விளக்கங்களை எழுத்தில் வடிக்கச் செய்தவர் இராமானுஜர் ஆவார். இவர், தனது சீடரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் மூலம், நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழிப் பாசுரங்களுக்கு ஆறாயிரப்படி உரை தோன்றுமாறு செய்தார். பின்னர், பட்டர் தனது சீடரான நஞ்சீயர் மூலம் திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி உரையினை

வெளிக்கொணர்ந்தார். நஞ்சீயர் வேறு சில பிரபந்தங்களுக்கும் உரைகள் அருளிச் செய்துள்ளார். நஞ்சீயரின் சீடரான நம்பிள்ளை வழங்கிய வாய்மொழிப் பேருரைகளை அடிப்படையாகக் கொண்டு, அவருடைய சீடரான பெரியவாச்சான் பிள்ளை திருவாய்மொழிக்கு இருபத்தி நாலாயிரப்படி வியாக்கியானம் அருளிச் செய்துள்ளார். நம்பிள்ளையின் மற்றொரு சீடரான வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவாய்மொழிக்கு, ஈடு முப்பத்தாயிரப்படி வியாக்கியானத்தை அருளிச் செய்துள்ளார். இவ்வாறு திருவாய்மொழியானது, ஐந்து வியாக்கியானங்களுடன் காணப்படுகிறது. நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படி வியாக்கியானம், கண்ணிநுண் சிறுத்தாம்பு வியாக்கியானம், பெரிய திருமொழி வியாக்கியானம், திருப்பள்ளியெழுச்சி வியாக்கியானம் முதலான வியாக்கியானங்களை எழுதியுள்ளார். இவற்றில் ஒன்பதினாயிரப்படி வியாக்கியானம், கண்ணிநுண் சிறுத்தாம்பு வியாக்கியானம் தவிர பிற வியாக்கியான நூல்கள் கிடைக்கவில்லை. நஞ்சீயர் வாழ்ந்த காலத்தைக் குறித்தும், "ஸ்ரீராமாயண ஸ்லோகம் ஒன்றுக்கு நஞ்சீயர், தாம் வாழ்ந்த காலத்தில் இருந்த சுந்தர பாண்டியத் தேவன் என்ற அரசனுக்கு விளக்கம் அருளிச் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இதுகுறித்து கல்வெட்டுக்களை ஆராய்ந்த டாக்டர் தெ.ஞானசுந்தரம் அவர்கள், நஞ்சீயர் காலத்தில் வாழ்ந்த அரசன் மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்றும், கி.பி. 1219-ல் மூன்றாம் ராஜராஜசோழனை வென்ற இவன், முடிகொண்ட சோழபுரத்தில் வெற்றி விழாவைக் கொண்டாடினான் என்றும் குறிப்பிடுகின்றார். நஞ்சீயர் கி.பி.1113 முதல் கி.பி.1208 வரை, 98 ஆண்டுகள் வாழ்ந்திருக்கக்கூடும் என்று ஸ்ரீ எஸ்.கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்கள் கருதுகிறார்."[10] என்று பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் எடுத்துக்கூறுவதையும் இங்கு காணலாம் எனவே நஞ்சீயர் தான் வாழ்ந்த 98 ஆண்டுகளில் அயராது உழைத்து ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் உள்ள குறிப்பிட்ட பாசுரங்களுக்கு எழுத்து வடிவில் உரை (வியாக்கியானம்) செய்துள்ளார்.

நஞ்சீயரின் மறைவிற்குப் பிறகு திருவரங்கத்தில் ஆசார்ய பதவியை வகித்தவர்கள் நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாச்சாரியர், பெரியவாச்சான் பிள்ளை, மணவாள மாமுனிகள், நம்பெருமாள் ஆகியோர் ஆவர். இவர்கள் அனைவரும் ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு வியாக்கியானங்கள் செய்தவர்களாவர்.

**நம்பிள்ளை வரலாறு**

நஞ்சீயர் அன்பிற்குரிய முதன்மையான ஆசார்யர் நம்பிள்ளை ஆவார். இவரது இயற்பெயர் நம்பூர் வரதராஜாசாரியர் என்பதாகும். இவருக்கு லோகாசாரியர் எனும் வேறு பெயரும் உண்டு. இவருடைய சீடர்கள் பின்பழகிய பெருமான் ஜீயர், வடக்கு திருவீதிப் பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை ஆகியோராவர்.

நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படி வியாக்கியானத்தை அருளிச் செய்தவுடன் அவை அனைத்தையும் பனை ஓலையில், எதிர்கால சந்ததியினருக்குப் பயன்பெறும் வகையில் தகுந்த நபர்களைக் கொண்டு எழுதிவைக்க எண்ணம் ஏற்பட்டது. அச்சமயம் பார்த்து நம்பூர் வரதராஜாசாரியர் வருகிறார். உடனே, நஞ்சீயர் தான் எழுதிய வியாக்கியானத்தின் பிரதியை நம்பூர் வரதராஜாசாரியாரிடம் கொடுத்து தெளிவாக எழுதுமாறு கட்டளையிடுகிறார். அதனை தமது ஊருக்கு எடுத்துச் சென்று எழுதிவருவதாக நஞ்சீயரிடம் விடைபெற்ற வரதராஜாசாரியார் நம்பூருக்குச் செல்கிறார். செல்லும் வழியில் காவிரி நதியை கடக்க வேண்டி வந்தது. அப்போது சுவடிகள்

ஈரமாகாமல் இருக்க தமது தலையில் ஏந்தி இக்கரையிலிருந்து அக்கரைக்குச் செல்லத் தொடங்கினார். திடீரென வெள்ளம் அதிகரித்து சுவடிகள் அனைத்தும் ஆற்றோடு அடித்துச் செல்லப்பட்டன. செய்வதறியாமல் திகைத்த வரதராஜாசாரியர் தன் ஆசார்யானுக்குப் பயந்து அஞ்சினார். திருமாலை நினைத்தும் தன் தவறினை நினைத்தும் மிக வருந்தினார். அதே நிலையோடு உறங்கிய நம்பிள்ளையின் கனவில் திருமால் தோன்றி தன்னையும், நஞ்சீயரையும் மனதளவில் நினைத்துக்கொண்டு பனை ஓலையில் வியாக்கியானத்தை எழுதும்படிக் கூறினார். உடனே எழுதத் தொடங்கினார். தொடர்ந்து எழுதிக்கொண்டே வரும்பொழுது நஞ்சீயர் விளக்கம் போலவே எழுதினார். நஞ்சீயரால் சொல்லப்படாத சிறப்பான விளக்கங்களும் சில இடங்களில் எழுதப்பட்டன. இவ்வாறாக திருவாய்மொழிக்கு வியாக்கியானத்தை எழுதிமுடித்தார். இதனை தன் ஆசார்யார் நஞ்சீயரிடம் சமர்ப்பிக்கிறார். வியாக்கியானத்தைப் படித்துப் பார்த்த நஞ்சீயர் தன்னால் சொல்லப்படாத சில விளக்கங்கள் இடம்பெற்றுள்ளதைக் கண்டு மகிழ்ந்து ஐயங்களை நம்பிள்ளையிடம் கேட்டார். அவரும் நடந்த உண்மைகள் அனைத்தையும் கூறி முடித்தார். இதைக்கேட்டு நஞ்சீயர் ‘வாரீர் நம்முடைய பிள்ளையே’ என்று கூறி அணைத்தார். அன்று முதல் நம்பூர் வரதராஜாசாரியார் எனும் பெயர் ‘நம்பிள்ளை’ என ஆயிற்று.

நம்பிள்ளையின் வியாக்கியானச் சொற்பொழிவினைக் கேட்டு பல வைஷ்ணவர்கள் அவருடைய திருவடியில் வீழ்ந்து வணங்கினர். அதே சமயத்தில் முதலியாண்டானின் பேரன் கந்தாடை தோழப்பர் என்பவரும் சிறந்த வியாக்கியானனாகத் திகழ்ந்தார். இருப்பினும் அனைவரும் நம்பிள்ளையைப் புகழ்ந்து பேசினர். இதனால் கந்தாடை தோழப்பருக்கு பொறாமை உண்டானது நம்பிள்ளையை இகழ்ந்து பேசினார். இதைக் கண்ட அவருடைய மனைவியார் நம்பிள்ளையிடம் மன்னிப்புக் கேட்கும்படி வற்புறுத்தினார். அப்போது கந்தாடை நம்பிள்ளையைக் கண்டால் மன்னிப்புக் கேட்க வேண்டும் என எண்ணியபோது அவ்விடத்திற்கு நம்பிள்ளை வருகிறார். அப்போது காலில் விழுந்து மன்னிப்பு கேட்டபோது, ‘உன்னிடம் ஒரு தவறும் இல்லை’ என்று கூறி நம்பிள்ளை மன்னிக்கிறார். அப்போது கந்தாடை தோழப்பர் ‘லோகத்துக்கெல்லாம்’ தேவர் எனக் கூறி லோகாசிரியர் என அழைத்தார். இதன் வாயிலாக லோகாசிரியர் என்ற பெயரும் இவருக்கு உண்டாயிற்று.

கந்தாடை தோழப்பர் போல பராசரபட்டரின் மாணவர் நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் என்பவரும் நம்பிள்ளை மீது பொறாமைக் கொண்டிருந்தார். ஒரு நாள் அரசனுக்கு இராமாயணம் குறித்த சந்தேகத்தை தீர்க்கும் பொருட்டு நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் அரசவைக்குச் செல்கிறார். அவ்வாறு செல்லும் போது நம்பிள்ளை மாணவர் பின்பழகிய பெருமாள் ஜீயரையும் உடன் அழைத்துக்கொண்டு செல்கிறார். அரசன் கேட்ட சந்தேகத்தைத் தீர்க்க பின்பழகிய பெருமாள் ஜீயரிடம் கலந்து ஆலோசனை செய்து கூறுகிறார். சந்தேகம் தெளிந்தவுடன் அரசன் ஏராளமான பொற்காசுகளைப் பரிசாகத் தருகிறார். அவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் நம்பிள்ளையின் காலடியில் வைத்து தன்னையும் மாணவராக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார். இவ்வாறாக நம்பிள்ளையின் அறிவாற்றலை உணர்ந்து சீடர்களாக வந்தவர்களும் உண்டு என்கின்றனர்.

நம்பிள்ளையின் வேண்டுகோள் படி சீடர்கள் பலர் திருவாய்மொழிக்கு வியாக்கியானம் செய்தனர். இதனைப் பற்றி, "ஒரு சமயம் நம்பிள்ளை தமக்குப் பிரிய சிஷ்யரான பெரியவாச்சான் பிள்ளையை அழைத்து, 'நீர் திருவாய்மொழிக்கு ஒரு வியாக்கியானம்' பண்ணும் என்று நியமித்தருள, பெரியவாச்சான் பிள்ளையும் ஸ்ரீராமாயண ஸ்லோகங்களைக் கொண்டு ஒரு வியாக்கியானம் செய்தருளினார்."[11] என்று புரிசை.அரங்கநாதன் குறிப்பிடுவதிலிருந்து அறிந்துகொள்ளலாம். நம்பிள்ளை திருவாய்மொழிக்கு தினமும் விளக்கம் கூறுவார். அதனை வடக்குத் திருவீதிப்பிள்ளை பகலெல்லாம் கேட்டு இரவில் எழுத்து வடிவமாக எழுதி வருவார். அதனை நம்பிள்ளையிடம் சமர்ப்பிப்பார். இவரும் அப்படிகளைத் தன்னிடமே வைத்துக்கொள்வார். இவற்றை அறிந்த ஈயுண்ணி மாதவப் பெருமாள் திருமாலிடம் வேண்டி நிற்க, திருமாலும் நம்பிள்ளையின் கனவிலே சென்று ஈயுண்ணி மாதவப்பெருமாளின் விருப்பத்தைத் தெரிவிக்கிறார். அதன்படி, திருவாய்மொழிக்கு ஈடு முப்பத்தாறாயிரம் படியை நம்பிள்ளை, ஈயுண்ணி மாதவப்பெருமாளிடம் (சிறியாழ்வான்) வழங்கி சிறப்பிக்கிறார். திருமங்கையாழ்வார் கார்த்திகை மாதத்தில், கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தது போலவே நம்பிள்ளையும் பிறந்ததால் திருமங்கையாழ்வாரின் அவதாரம் என்றும் குறிப்பிடுவாரும் உண்டு.

**வடக்குத் திருவீதிப்பிள்ளை வரலாறு**

நம்பிள்ளைக்கு அடுத்து வைணவ ஆசார்ய பதவி வகித்தவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை ஆவார். இவர் நம்பிள்ளைக்கு அன்பிற்குரிய சீடராவார். இவரது இயற்பெயர் ஸ்ரீகிருஷ்ணமகாகுரு என்பதாகும். திருவரங்கம் பெரியகோவிலின் வடக்குத் திருவீதியில் வசித்து வந்ததால் இவருக்கு வடக்குத் திருவீதிப்பிள்ளை அவர்களின் தயார் அம்மியம்மாள் சென்று, 'சுவாமி தம்முடைய சீடனான என் பிள்ளைக்கு ஒரு கல்யாணம் செய்வித்தீரே! அவன் மனைவியோடு வாழ மறுத்து வம்சம் இல்லாமல் போய்விடும் போல!' என்று வேண்டி நின்றார். உடனே நம்பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளையை அழைத்து, 'உன் மனைவியான ஆச்சியம்மாளிடம் இன்று கூடியிருப்பாய். திருமால் அருளால் ஒரு செல்வன் பிறப்பான்' என வாழ்த்தி அனுப்பினார். அதன்படி வடக்குத் திருவீதிப்பிள்ளை அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இக்குழந்தைக்கு பிள்ளைலோகாச்சார்யர் என்று நம்பிள்ளை பெயரிட்டார். திருமால் நம்பிள்ளையிடம், 'உம்மைப்போல் ஒரு பிள்ளையை அருளினீரே! நம்மைப்போல் ஒரு பிள்ளையை அருளும்! என்று கூற, பிள்ளைலோகாச்சார்யர் சகோதரனாக அழகிய மணவாளப் பெருமாள் அவதரித்தார். இவர் திருவாள்மொழிக்கு ஈடு முப்பதாறாயிரப்படி இயற்றியவராவர். இவருக்கு வள்ளல் என்ற அடைப்பெயரும் உண்டு. ஏனெனில் நம்பிள்ளை கூறிய விளக்கம் அனைத்தையும் முப்பதாறாயிரம் படியாக இயற்றியதால் வள்ளல் என வைணவ உலகம் இவரை போற்றுகின்றது.

**பெரியவாச்சான் பிள்ளை வரலாறு**

வடக்குத் திருவீதிபிள்ளைக்கு அடுத்து வைணவ உலக ஆசார்யராகத் திகழ்ந்தவர் பெரியவாச்சான் பிள்ளை ஆவார். நம்பிள்ளையின் அந்தரங்க சீடர்களில் ஒருவர். இவர் சங்க நல்லூர் என்ற ஊரில் யமுன தேசிகர், நாச்சியாரம்மாள் புதல்வராகப் பிறந்தார். இவருக்கு ஆச்சான் பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, அபயப்ரதராஜர், ஸ்ரீமத் கிருஷ்ணர் எனும் பல பெயர்கள் உண்டு. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முழுவதிற்கும் உரை (வியாக்கியானம்) எழுதியவர் இவர் ஒருவரே ஆவார். இது

இராமாயணம் போல இருபத்தினான்காயிரம் ஸ்லோகங்களின் பரப்பு கொண்டது. அதுமட்டுமல்லாமல் பரந்த ரகஸ்ய விவரணம், உபகார ரத்னம், பாசுரப்படி இராமாயணம் எனும் நூல்களையும் எழுதியுள்ளார். நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு பலரும் பகுதி அளவே வியாக்கியானம் செய்துள்ள நிலையில் இவர் தந்த வியாக்கியானங்கள் முழுமையாகவும் கருத்தாழம் மிக்கதாகவும் உள்ளன. இச்சிறப்பினை,

"பெரியவாச்சான் பிள்ளை பின்பு உள்ளவைக்கும்
தெளிய வியாக்கியைகள் செய்வால் – அரிய
அருளிச் செயல் பொருளை ஆசிரியர்கட்கு இப்போது
அருளிச் செயலாய்த் தறிந்து."[12]

என உபதேசரத்தின மாலை எனும் நூலில் மணவாள மாமுனிகள் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக வைணவ உலகிற்கு மாபெரும் வியாக்கியான சேவையைச் செய்து தந்ததால் இவரை 'வியாக்கியானச் சக்கரவர்த்தி' என்று அழைப்பர்.

**பிள்ளைலோகாசாரியர் வரலாறு**

இவர் வடக்குத் திருவீதிப்பிள்ளையின் மகன் ஆவார். இவருடைய சகோதரர் அழகிய மணவாளப்பெருமாள் கருணையால் சீடர்களை அதிகப்படியாக சேர்த்த பெருமைக்குரிய எம்பெருமானார் என அழைக்கப்படும் இராமானுஜர் ஆவார். அதே குணம் இவரிடமும் உண்டு எனலாம். நம்பிள்ளை மூலமாக வடக்குத் திருவீதிப்பிள்ளை தன் மகனுக்கு பெயர் சூட்டிய நிலையினைப் பற்றி,

"பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளை அன்பால்
அன்ன திருநாமத்தை ஆதரித்து – மண்ணு புகழ்
மைந்தருக்குச் சாத்துகையால் வந்து பரந்து எங்கும்
இந்த திருநாமம் இங்கு."[13]

என மணவாள மாமுனிகள் கூறுகிறார். இவருடைய முக்கிய மாணவர்களாக வினாஞ்சோலை பிள்ளையும், திருவாய்மொழிப்பிள்ளையும் ஆவர். மணவாள மாமுனிகளை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். மணவாள மாமுனிகள் ஒவ்வொரு முறையும் திருவரங்கம் வரும்போதெல்லாம் 'இது ரகசியம் விளைந்த மண்' என்று அழைக்கப்படும் பிள்ளைலோகாசாரியார் இடத்திற்கு வந்துவிட்டே அரங்கனை வணங்குவார் என்று வைணவர்கள் குறிப்பிடுவர். அதாவது, "திருவரங்கம் ஆலயம், வடநாட்டிலிருந்து படையெடுத்து வந்த திப்பு சுல்தான் வீரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, பிள்ளைலோகாசார்யர், திருவரங்கம் பெரியபெருமாளை கல்காப்பு சாத்தி மறைத்து, உற்சவ மூர்த்தியான நம் பெருமாளை மறைவான இடத்தில் வைத்துக் காத்ததாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறு எம்பெருமானைக் காத்துவரும் வேளையிலேயே ஜீயோதிஷ்குடி என்னும் கிராமத்தில் பிள்ளைலோகாசார்யர் திருநாட்டுக்கு எழுந்தருளினார் என்றும் சொல்லப்படுகிறது. ஆக, தம்முடைய ஸர்வத்தையும் நம்பெருமாளுக்காகச் செய்த பெருமை பிள்ளைலோகாசார்யருக்கு உண்டு என்று சொன்னால் அது மிகையாகாது."[14] எனக் கூறுவதிலிருந்து திருவரங்கம் பெருமாளுக்காகவே தன் உயிரை விட்டவர் பிள்ளைலோகாசார்யர் என்பதை அவருடைய வரலாற்றின் வாயிலாக அறியலாம்.

**மணவாளமாமுனிகள் வரலாறு**

பிள்ளைலோகாச்சார்யர், திருவாய்மொழிப்பிள்ளை ஆகியோர்களுக்கு அடுத்து ஆசார்ய பதவி வகித்தவர் மணவாளமாமுனிகள் ஆவர். இவரை ஆதிசேஷனின் அம்சம், இராமானுஜரின் அவதாரம் என்றும் கூறுவர். ஆழ்வார் திருநகரி எனும் ஊரில் திருநாவீறுடைய பிரான தாஸரண்ணர் என்பவருக்கு கி.பி.1370-ல் மகனாகப் பிறந்தார். இராமானுஜர் தான் இறந்த பிறகும் உலகை இன்னும் திருத்தி ஆட்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை நிறைவேற்றுவதற்காகவே மணவாள மாமுனிகளாகப் பிறந்தார் என்றும் கூறுவர். இவருக்கு பெரிய ஜீயர் என்ற பெயரும் உண்டு.

வைணவத்தில் தனியன் பாசுரங்கள் இவருடைய காலத்திலிருந்து தொடங்குகிறது. மணவாள மாமுனிகளின் கனவில் திருமால் தோன்றி ஈடு முப்பத்தாயிரம் வியாக்கியானத்தை ஒரு வருடம் சொற்பொழிவு செய்யுமாறு கூறுகிறார். அதன்படி ஒருவருடமாகத் திருவரங்கத்தில் சொற்பொழிவு செய்தார். இந்த அதிசயத்தைக் கண்ட கந்தாடையண்ணன், வானமாமலை ஜீயர், பட்டர் பிரான் ஜீயர் ஆகிய மூவரும் மணவாள மாமுனிகளைப் புகழ்ந்து வாழ்த்துப்பாடல் ஒன்றை யாருக்கும் தெரியாதளவிற்குத் தயார் செய்து ஏகமனதாக பாடுவதற்குத் தயராக இருந்தனர். அச்சமயம் பார்த்து ஓர் ஆண் குழந்தை கூட்டத்திற்குள் வந்து அம்மூவர் தயார் செய்த வாழ்த்துப்பாடலைப் பாடிவிட்டு மறைந்தது. இவ்வதிசயத்தை கண்ட அனைவரும் திருமாலே நேரடியாக வந்து மணவாள மாமுனிகளைப் புகழ்ந்து பாடினார் எனக் கூறி பெருமையடைந்தனர். இதன் தொடர்ச்சியாகத்தான் தனியன் பாசுரங்களும் அதிகம் தோன்றலாயின.

இவர் ஆதிகேஷன், இராமானுஜர் அவதாரம் என்பதற்கு சுவாரசியமான நிகழ்வுகள் பல உண்டு. ஒரு சமயம் ஆழ்வார் திருநகரியில் ஒரு குடிசையில் வியாக்கியானம் செய்து கொண்டிருக்கையில் அவர் மீது பொறாமைக் கொண்ட சிலர் குடிசைக்குத் தீயிட்டனர். அதிலிருந்து அவர் பாம்பாக வெளியேறி கூட்டத்தோடு கூட்டமாக நின்றுகொண்டார். இதனைக் கண்ட அனைவரும் ஆதிசேஷனின் அம்சம் என்றே கருதினர்.

ஒருநாள் கந்தாடையண்ணரின் உறவினரான எறும்பியப்பா என்பவர் திருவரங்கனை வழிபாடு செய்ய வந்தார். அப்போது மணவாள மாமுனிகள் வியாக்கியானம் செய்து கொண்டிருப்பதைக் கண்டும் காணாமல் சென்றுவிட்டார். அடுத்த நாள் எறும்பியப்பா திருவாராதனப் பெருமாளை வணங்க செல்லும்போது அக்கோவிலின் திருக்கதவு தானாக சாத்தப்பட்டதைக் கண்டு மிக வருந்தினார். இவ்வருத்தத்தோடு இரவில் உறங்கினார். அப்போது அவருடை கனவில் திருமால் தோன்றி ‘இராமானுஜ அவதாரமாக உள்ள மணவாள மாமுனிகளை வணங்கினால் மட்டுமே தான் உனக்கு காட்சி தருவேன்’ என்றுகூறி மறைந்தார். அடுத்த நாளே எறும்பியப்பா மணவாளமாமுனிகளிடம் சீடராக வந்து சேர்ந்தார். இவ்வாறாக ஆதிசேஷனாகவும், இராமானுஜராகவும் அவதாரம் எடுத்தமைக்கு வைணவர்கள் பல காரணங்கள் எடுத்துக் கூறுகின்றனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மணவாளமாமுனிகள் வைணவ சமயத்தைப் பரப்புவதற்காக எட்டு வைணவ அறிஞர்களை நியமித்தார். அவர்களை அஷ்டதிக்கஜங்கள் என்று அழைப்பர். அவர்களாவர் 1. வானமாமலை ஜீயர், 2. திருமலை எம்பெருமானார் ஜீயர், 3. பட்டர் பிரான் ஜீயர், 4. கோயில் கந்தாடையண்ணன், 5. எறும்பியப்பா, 6. அப்பிள்ளை, 7. அப்பிள்ளான், 8. பிரதிவாதி

பயங்கரம் அண்ணா ஆகியோர் ஆவர். இத்தகு சிறப்பு வாய்ந்த மணவாள மாமுனிகள் பெரியாழ்வார் திருமொழி வியாக்கியானம், நூற்றந்தாதி உரைகள், உபதேச ரத்தின மாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி உள்ளிட்ட பல்வேறு நூல்களை இயற்றியுள்ளார். தமது 73-வது வயதில் வைகுண்ட பதவி அடைந்தார்.

இவ்வாறாக வைணவ ஆசார்யர்களின் வரலாற்றை பல்வேறு விதங்களில் காணமுடிகிறது. நாதமுனிகள், ஆளவந்தார், இராமானுஜர், எம்பார், பராசரப்பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், மணவாளமாமுனிகள் ஆகியோர்களின் வரலாறு மூலமாக நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு வியாக்கியானம் தோன்றிய வரலாற்றினை அறிகின்றோம். குறிப்பாக, இராமானுஜர் காலத்தில் வைணவத்திற்கான உரை தோற்றம் பெறுவதற்குக் கால் ஊன்றப்பட்டது. இவருக்குப் பிறகுதான் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு உரைகள் அதாவது, வியாக்கியானங்கள் தோன்றின. பெரும்பாலும் நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழிக்கு மட்டும்தான் எழுத்து வடிவிலான உரைகள் தோன்றியுள்ளது. வியாக்கியானச் சக்ரவர்த்தி என்றழைக்கப்படும் பெரியவாச்சான் பிள்ளை மட்டுமே நாலாயிர திவ்யப் பிரபந்தங்கள் முழுமைக்கும் உரை எழுதி வைணவ இலக்கியத்தை மெருகேற்றச் செய்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**சான்றெண் விளக்கம்**

1. தே.ந.ச.தேவராஜன், வைணவமும் ஆழ்வார்களும், ப.1020.
2. பிள்ளைலோகாச்சார்யர், ஸ்ரீவசனபூஷணம், 305.
3. திருவாய்மொழி, 5-8-11.
4. தே.ந.ச.தேவராஜன், வைணவமும் ஆழ்வார்களும், ப.1038.
5. புரிசை.ச.அரங்கநாதன், ஸ்ரீவைணவ பூர்வாசிரியர்கள் வைபவம், ப.118.
6. மேலது, ப.144.
7. டாக்டர் கே.ஆர்.விட்டல்தாஸ், ஆழ்வார்களும் இந்திய வைணவ இலக்கியங்களும், பக்.261.
8. வேணுசீனிவாசன், ஸ்ரீவைஷ்ணவம், ப.372.
9. மேலது, ப.388.
10. பேராசிரியர் ந.சுப்புரெட்டியார், வைணவச் செல்வம் (தொகுதி-II), ப.115.
11. புரிசை.ச.அரங்கநாதன், ஸ்ரீவைணவ பூர்வாசிரியர்கள் வைபவம், ப.172.
12. மணவாள மாமுனிகள், உபதேச ரத்தினமாலை, பா.எண்: 46.
13. மேலது, பா.எண்: 52.
14. ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசாரியர், கோயிலொழுகு (தொகுதி-2), பக்.203.

**துணைநூற்பட்டியல்**


1. **அரங்கநாதன்,ச.புரிசை - ஸ்ரீவைணவ பூர்வாசிரியர்கள் வைபவம்**
பாரதி புத்தகாலயம்
ஜி-7, அமுதம் குடியிருப்பு
தெற்கு போக்குச் சாலை, சென்னை-17
பதிப்பாண்டு 2000

*2. கிருஷ்ணமாசாரியர்,அ.ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ* - ***கோயிலொழுகு (தொகுதி-2)***
*ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ*
*வடக்கு உத்தர வீதி*
*ஸ்ரீரங்கம்*

*3. சுப்புரெட்டியார்,ந.பேராசிரியர்* - ***வைணவச் செல்வம் (தொகுதி-II)***
*தமிழ்ப் பல்கலைக்கழகம்*
*தஞ்சாவூர் – 10*
*முதற்பதிப்பு 2010*

*5. தேவராஜன்,தே.ந.ச* - ***வைணவமும் ஆழ்வார்களும்***
*ஸ்ரீசெண்பகா பதிப்பகம்*
*கிருஷ்ணா தெரு*
*தி.நகர், சென்னை – 17*
*முதல் பதிப்பு 2002*

*6. பிள்ளைலோகாச்சார்யர்* - ***ஸ்ரீவசனபூஷணம்***
*வடவள்ளி ஸ்ரீயதிராஜ கைங்கர்ய சபை*
*கோவை-61*

*7. மணவாள மாமுனிகள்* - ***உபதேச ரத்தினமாலை***
*ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம்*
*3, புத்தூர் அக்ரஹாரம்*
*திருச்சி-17*

*8. வேணுசீனிவாசன்* - ***ஸ்ரீவைஷ்ணவம்***
*என்சைக்ளோபீடியா*
*கிழக்குப் பதிப்பகம்*
*177/103, முதல் தளம்*
*இராயப்பேட்டை, சென்னை-14*
*இரண்டாம் பதிப்பு 2014*

*9. விட்டல்தாஸ்,கே.ஆர்.டாக்டர்* - ***ஆழ்வார்களும் இந்திய வைணவ இலக்கியங்களும்***
*பழனியப்பா பிரதர்ஸ்*
*கோனார் மாளிகை*
*25, பீட்டர்ஸ் சாலை, சென்னை-14*
*முதற்பதிப்பு 2002*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X


## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

ஆண்டு 2020, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் அக்டோபர் - 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.


www.aranejournal.com

aranjournal@gmail.com

72995 87879